## இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவகம் -2013

இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை சுற்றுலா மற்றும் ஹொட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும்

அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்கள் (இ.அ.க.நி)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | தொடர்பு | இணக்கமின்மை | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) i | இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 1- 70 ஆம் பந்தி | நிலையான மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் | ரூபா 100 மில்லியன் அளவிலான குறுங்கால முதலீட்டினை நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்தொன்றாக உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| ii | 88 ஆம் பந்தி | அருவகச் சொத்துக்கள் (Intangible Assets) | நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் போன்றவை உருவச் சொத்துக்களின் கீழ் ரூபா 736,505 பெறுமதியான மென்பொருட்களின் கிரயம் உள்ளடக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 – 15 ஆம் பந்தி | இருப்புக்கள் | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக் கப்பட்டிருந்த இருப்புக்களின் பெறுமதி கணக்கிடப்பட்ட முறை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

நிறுவகத்தில் சேவை புரிந்த முன்னாள் பணிப்பாளர் நாயகத்திற்காக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு கொடுப்பனவு செய்யாமை தொடர்பில் தொழில் திணைக்களத்தில் இடம்பெறுவர் வழக்கில் ஏற்படக்கூடிய பொறுப்புக்கள் தொடர்பாக கணக்குகளில் நிதிஏற்பாடுகள் அல்லது வெளிப்படுத்தல் ஒன்றோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களிலும் கீழே காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் மீதிகளுக்கிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன், அதற்கான விளக்கங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. நீண்டகாலமாக இனங்காணப்படாமல் இருக்கும் இந்த வேறுபாடுகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி | பயன்படு நிதி அறிக்கைகளின் பிரகாரம் விபரம் | பயன்படு நிதி அறிக்கைகளின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி | 130,706,926 | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்கு | 6,511,960 | 50,151,254 |
| | | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியம் | 174,346,220 | |
| இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய மீதி | 8,297,267 | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்கு | 11,236,982 | 2,939,715 |

### 2.2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபாரக் கடன்பட்டோர் மீதியான ரூபா 15,003,291 தொகையில் ரூபா 9,195,387 தொகை அல்லது 61 சதவீதம் ஓராண்டிற்கு மேற்பட்ட மீதிகளைக் கொண்டிருந்தன.

(ஆ) செயற்திட்டமொன்றை அமுற்படுத்துவதற்காக 2011 ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,503,002 தொகை, செயற்திட்டம் முடிவுற்றிருந்த போதிலும், அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) உழைக்கும் போது செலுத்தும் வரிக் கணக்கில் வரவில் உள்ள மீதியான ரூபா 69,659 தொகையை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | பெறுமதி (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| அ) நிலையான சொத்துக்கள் | 285,731,930 | I. நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>II. பௌதீக மெய்மையாய்வு அறிக்கை<br>III. உரித்து உறுதி |
| ஆ) இருப்புக்கள் | 3,736,772 | பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| இ) பெற வேண்டிய கணக்குகள் | 149,420,095 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| ஈ) நடைமுறைவேலை | 2,055,721 | அட்டுறுவாக்குவதற்குரிய எழுத்து மூலச்சான்று (உறுதிப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்கள்) |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானம் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டம் | |
| I. 39(1) | நிறுவகத்தினால் அமைச்சரிடம் விசாரித்து கலை அலுவல்கள் தொடர்புடைய பொறுப்பாண்மை சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| II. 39(2) | கலை நடவடிக்கைகள் பொறுப்பு சபைக்கு ஹொட்டல் பாடசாலையின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |
| III. 39(3) | (i) கலை நடவடிக்கைகள் பொறுப்புச் சபையை நியமனம் செய்யும் முறை மற்றும் நிறுவகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் நிர்வகிக்க வேண்டிய முறை தொடர்பாக கட்டளைகள் தயாரிக்கப்படாமை.<br>(ii) சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் ஹோட்டல் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்காக தனிப்பட்ட உரித்துடன் கூடிய ஹோட்டல் பாடசாலைகளை அமைத்தல் முகாமைத்துவம் மற்றும் வழிகாட்டுவதற்காக அப்பாடசாலைகளை நிர்வகிப்பதற்காக கட்டளைகள் தயாரிக்காமை. |

| | |
|---|---|
| (ஆ) 1999 இன் சுற்றுலா ஹொட்டல் உறுப்புரைக் கோவையின் 02 ஆம் பந்தி | சுற்றுலா ஹொட்டலொன்றை நடாத்தி செல்லும் போது வியாபாரத்தைப் பதிவு செய்து அதற்காக அனுமதிப்பத்திர மொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், நிறுவகத்திற்குச் சொந்தமான ஹொட்டலொன்றிற்குப் பதிவுச் சான்றிதழ் மற்றும் அனுமதிப்பத்திரம் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| I. நிதிப் பிரமாணம் 104(3),(04) | இரண்டு சந்தர்ப்பங்களில் நிறுவகத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் விபத்திற்குட்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்து ஆரம்ப அறிக்கை மற்றும் பூரண அறிக்கை என்பவற்றை அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| II. நி.பி 756 | பொருள் மெய்மையாய்வு அறிக்கையை 2014 மே 08 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஈ) 1999 ஒக்தோபர் 08 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 22/99(1.3.1) ஆம் பந்தி | நிறுவகத்தினால் மூன்று குழுக்களுக்காக குழு போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டு வருவதுடன். அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி வன்பொருட்கள் மற்றும் மென் பொருட்கள் என்பவற்றிற்காக பதிவேடு ஒன்று பேணப்படவேண்டிய போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஊ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மாதாந்த செயற்திறன் அறிக்கை, செயற்பாட்டு அறிக்கை, கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி, மனிதவள அறிக்கை, ஆகியவை தொடர்பான அறிக்கைகள் நிர்வாகச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| I. பிரிவு 4.2.5 | தொழிற்படு மூலதனத்தை செயற்திறனாக முகாமை செய்யும் நோக்கில் கீழே காட்டப்பட்டுள்ள கூற்றுக்களை பணிப்பாளர் சபையால் மாதாந்தம் மீளாய்வு செய்ய வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(அ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு,<br>(ஆ) இருப்புக் காலப்பகுப்பாய்வு<br>(இ) பழைமைவாய்ந்த காலாவதியான மற்றும் மெதுவாக நகரும் இருப்பும் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான கூற்று |
| II. பிரிவு 7.2 | நிறுவகத்தின் பிரதான செயற்பாடு களுக்காக கைநூல்கள் மற்றும் ஏற்பாடுகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், களஞ்சியம் மற்றும் பான விற்பனைச்சாலைகளுக்காக அதே முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| III. பிரிவு 8.3.5 | தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்துவதற்கு உரித்தினைப் பெறாத 06 உத்தியோகத்தர்களுக்கு அங்கீகார மின்றி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் போக்குவரத்துப் படியாக ரூபா 7,180,560 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |

**2.4 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் போது சமுத்திரா ஹோட்டலிற்கான ரூபா 15,003,291 தொகைக்குரிய கடன் விற்பனை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நடவடிக்கைகளால் நிதி விளைவு ரூபா 78,253,762 ஆன மிகையொன்றானதாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 50,896,177 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 27,357,585 அதிகரிப்பொன்றைக் காட்டியது. முன்னைய ஆண்டை விட வரி வருமானம் ரூபா 52,910,913 ஆலும் ஹொட்டேல் வருமானம் ரூபா 6,001,977 ஆலும் அதிகரித்தமையே நிதி விளைவுகளில் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் வருமானம் ரூபா 356 மில்லியனாக இருந்ததுடன், அது முன்னைய ஆண்டின் ரூபா 289 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 23.1 சதவீத அதிகரிப்பாக இருந்தது. அவ்வாறே, முன்னைய ஆண்டின் கற்பித்தல், பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்டிருந்த ரூபா 238 மில்லியன் உடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 278 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 16.8 சதவீதமான அதிகரிப்பைக் காட்டியது.

**3.3. செலவினங்களில் அசாதாரணமான அதிகரிப்பு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மேலதிக கடமை மணித்தியாலத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 3,969,065 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 327 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

(ஆ) அலுவலக உபகரணங்களைப் பராமரிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 6,357,762 செலவிடப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டை விட 76 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 ஹொட்டல் பாடசாலைகளின் செயலாற்றல்

மாணவர்களைப் பயிற்றுவிப்பது தொடர்பான செயலாற்றல், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| ஆண்டு | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| பாடநெறிகளை பின்பற்றுவதற்கு தகைமை பெற்றிருந்த மாணவர்களின் எண்ணிக்கை | 768 | 883 | 1545 | 2056 | 2131 |
| பாடநெறிகளை பூர்த்திசெய்த மாணவர்களின் எண்ணிக்கை | 738 | 838 | 1464 | 1772 | பெபேறுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| பாடநெறிகளை விட்டுச் சென்ற மற்றும் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை | 30 | 45 | 81 | 284 | 4 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர் |

(அ) மீளாய்வாண்டில் ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 130,642 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டில் அது ரூபா 134,578 ஆக இருந்தது.

(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கூட்டுத் திட்டத்தின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டளவில் சுற்றுலாப் பயணிகளது வருகையை 2.5 மில்லியன் வரையில் அதிகரிப்பதற்கு இலக்கிடப்பட்டுள்ளது. அந்த இலக்கை அடைந்து கொள்வதற்காக 4000 பயிலுனர்களை பயிற்றுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், காணப்படும் நிலைமையின் பிரகாரம் இந்த இலக்கை நிறைவேற்றுவது சிக்கலாக இருப்பது அவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சுற்றுலா வளங்களை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் மூலம் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்கு தேசிய தொழிற் தகைமை (NVQ) பெற்றுக்கொள்வதற்காக ஆலோசனையையும் ஒத்துழைப்பையும் வழங்கிய போதிலும், நிறுவகத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ம் திகதி வரை தேசிய தொழிற் தகைமையுடன் கூடிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆங்கிலமொழி அபிவிருத்திக்காக ரூபா 1,210,000 தொகை செலவிடப்பட்டு நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கையில் 43 சதவீதமானோர் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை**

சமுத்திரா ஹோட்டலில் மீளாய்வாண்டில் வருமானத்தை உழைத்துக் கொள்வதற்காக அறை நாட்கள் 4745 காணப்பட்டதுடன், அதில் நிறுவனம் 2015 அறை நாட்களையே விற்பனை செய்திருந்தது.

**4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

நிறுவனத்திற்குச் சொந்தமான அலுவலக கட்டிடத்தின் இடவசதிகளை முகாமை செய்து பயன்படுத்தாமையால் 8547 சதுர அடி அளவிலான அளவு கடந்த சில வருடங்களாக குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலகத்தின் 4952 சதுர அடி அளவிலான இடத்தை வெளி நிறுவனமொன்றிற்கும் தனிப்பட்டநபர் ஒருவருக்கும் ஒதுக்கப்பட்டிருந்த போதும், நீர், மின்சாரம் அல்லது வாடகையோ அறவிடப்படாமல் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டமையால் நிறுவனத்திற்கு அண்ணளவாக ரூபா 16,379,700 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நிறுவனத்திற்குச் சொந்தமான மிகை நிதியை பயனுள்ள வகையில் முதலீடு செய்வதற்கு கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன், கூடிய நடைமுறை விகிதமொன்று காணப்பட்டமையால் பலவீனமான நிதி முகாமைத்துவம் இருந்தமை சுட்டிக்காட்டப்பட்டது.

### 4.6 தாமதமான செயற்திட்டங்கள்

சமையலறை உற்பத்திகள் மற்றும் லொன்றி சேவைகள் என்பவற்றை பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்காக ரூபா 11.70 மில்லியனான மதிப்பீட்டில் விற்பனைக் கூடங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அச்செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 160 ஆக இருந்ததுடன், தற்போது நிறுவகத்தின் உள்ளவாறான பதவியணி 112 ஆக இருந்தது. 52 பதவிகள் வெற்றிடங்களாகவும் 4 பதவிகள் மிகையாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டன.

(ஆ) வெளி விரிவுரையாளர்களை சேர்த்துக்கொள்ளும் போது பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது ஒரு நபருக்குரிய பதவியணிக்கான கிரயம் ரூபா 823,138 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது அது ரூபா 615,609 ஆக இருந்தது.

**4.8 வாகனப் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்திற்குச் சொந்தமாக 02 வாகனங்கள் காணப்பட்டதுடன், அவ்வாகனங்களின் ஓட்டத்திற்குரிய ஓட்டக் கிரயம் (எரிபொருள் மற்றும் பராமரிப்பு செலவினம்) ஒரு கிலோமீற்றருக்கு ரூபா 126 என்ற கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்களுக்காக ரூபா 10,838,754 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தன. இந்த வாடகை வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட அளவு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.9 முகாமைத்துவத்தகவல் முறைமையின் தரம் மற்றும் நம்பகத் தன்மையும்**

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் கணனி மற்றும் கணனி மென்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 45 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்தின் கீழே காட்டப்பட்டுள்ளதன் படி முகாமைத்துவ தகவல்களுக்கான தேவைகள் இனங்காணப்பட்டு முறையான தகவல் முறைமையொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மாணவர் தொடர்பான தகவல் முறைமை
(ஆ) களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பான தகவல் முறைமை
(இ) பதவியணியினர் தொடர்பான தகவல் முறைமை

## 5. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 53 நாட்கள் தாமதத்தின் பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2014 ஏப்ரல் 22 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டுத் திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத் திட்டம் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காக தயாரித்து அமைச்சினதும் திறைசேரியினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும், ஒப்படைக்க வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடையக்கூடிய இலக்குகளை தெளிவாகவும் போதியளவிலும் குறிப்பிடப்படாமல் இருந்ததுடன், திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீளாய்வாண்டில் அடையப்பட்டதற்கான செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கல்

(ஆ) புதிய கற்பித்தல் வசதிகளை ஏற்படுத்தல்

(இ) சீன மொழி உட்பட வெளிநாட்டு மொழிகள் கற்பித்தல் பிரிவொன்றை தாபித்தல்

**5.4 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 கணக்காய்வுக்குழு**

மீளாய்வாண்டின் போது 05 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்துவது திருப்திகரமான நிலையில் இருக்கவில்லை.

**5.6 கொள்வனவுத் திட்டம்**

2006 சனவரி 25 ஆம் திகதிய தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்திற்காக மூன்று ஆண்டு கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.7 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் போது 30 விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகளுக்கிடையே 21 சதவீதத்திலிருந்து 410 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.8 ஆண்டறிக்கையை சபைக்கு சமர்ப்பித்தல்**

நிறுவகத்தினால் 2011 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை 2014 மார்ச் 18 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.9 சுற்றாடல் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹொட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்குரிய சமுத்திரா ஹொட்டலிற்காக பொது பொறுப்புக்கள் காப்புறுதியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமுத்திரா ஹொட்டலின் நீர், பாவனைக்கு உகந்ததா என நீரின் மாதிரி பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக ஹொட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் தலைவருக்கு அவ்வப்போது தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) மனித வள முகாமைத்துவம்

(இ) சொத்து முகாமைத்துவம்

(ஈ) கொள்வனவு

(உ) கணக்கீடு